©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 283] CHENNAI, FRIDAY, AUGUST 26, 2011
Aavani 9, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திருநெல்வேலி.**

**திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிக்கை.**

*(அ6/2452/2007.)*

**No. VI(2)/427(c-1)/2011.**

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலசேகரப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. மணிவண்ணன் என்பவர் நிதி முறைகேடுகளின் காரணமாக ஊராட்சிக்கு ரூ. 11,41,796 நிதியிழப்பு ஏற்படுத்திய காரணத்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை பயன்படுத்தி குலசேகரப்பட்டி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. மணிவண்ணன் என்பவரை குலசேகரப்பட்டி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் எனவும், இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**திருநெல்வேலி மாவட்டம், களக்காடு ஊராட்சி ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிக்கை.**

*(அ6/3210/2010.)*

**No. VI(2)/427(c-2)/2011.**

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு ஊராட்சி ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி எம். பானு என்பவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணியில் முறைகேடுகள் செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணத்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை பயன்படுத்தி சிங்கிகுளம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி எம். பானு என்பவரை சிங்கிகுளம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இவ்வறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியாகும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் எனவும், இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி,
2011 ஆகஸ்ட் 25.

**இரா. செல்வராஜ்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

Verified RealEstate™

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.